## இராணுவ வாகனம் தகர்க்கப்பட்டது
## 9 கமாண்டோப் பொலீசார் உயிரிழந்தனர்

5.8.84

நெடியகாடு
தாக்குதல் நடந்த இடம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஸ்ரீலங்கா சிங்களக் கடற்படையினருக்கு எதிரான எமது தாக்குதலை யடுத்து சிங்கள இராணுவப் படைகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது தமது இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் வீதிகளிலே சுடப்பட்டனர். வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. அப்பாவி மக்கள் மீது சிங்கள இராணுவப் படையினர் நடத்திய இந்த நாசகாரச் செயலுக்கு நாமும் பதிலடி கொடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

1984 ஆகஸ்டு 5ம் திகதியன்று வல்வெட்டித்துறைக்கு அருகில் நெடியகாடு என்ற இடத்தில் மூன்று கவசவண்டிகள், ஒரு ட்ரக், ஒரு ஜீப் சகிதம் வெறியாட்டம் நடத்திவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சிங்களப் படையினர் மீது எமது வீரர்கள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். பிரதான வீதியில் எமது வீரர்கள் புதைத்து வைத்திருந்த நிலக்கண்ணி வெடித்ததில் ஒரு ஜீப் வண்டி தூள் தூளாகச் சிதறியதுடன் அந்த ஜீப்பில் சென்று கொண்டிருந்த ஒன்பது கமாண்டோக்களும் அந்த இடத்திலேயே மரணமடைந்தனர். இந்தத் திடீர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட உதவி பொலிஸ் அதிபரான ஜயரட்ன என்பவன் மோசமான இன வெறியனும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீவைப்பு போன்ற நாசகாரச் செயல்களுக்குப் பொறுப்பாக இருந்தவனுமாவான். •